சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | குமார் |
| தந்தை பெயர் | : | அய்யாக்கண்ணு |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 52 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா-1 சூரியா என்பவரை தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக மலையூர் குடியான தெருவில் காலை சுமார் 10 மணிக்கு நடராஜன் வீட்டிற்கு அருகே குடியான தெருவிற்கு திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் கொரடாச்சேரி போலீசார் வந்திருந்தார்கள். அப்போது கூட்டமான இருந்தது நானும், சுதாகர் என்பவரும் அங்கு சென்றோம். என்னிடம் சண்டை நடந்தது தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று சொன்னேன். ஒரு கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-2 ஆன பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்தார் விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என்னை போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும், நான் என்னை போலீசார் விசாரணை செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.10.16 17:46:26 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.